1975 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்குத் தனிக் கேள்வி கேளுங்கள்.

(பதிலில்லை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அவையுரிமைப் பிரச்சினை.

மதம் மாறிய அரிசனங்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவைக்கு உண்மைக்கு மாருன தகவலை அளித்ததாகக் கூறி கொண்டு வரப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை விதி 184-ன் கீழ் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அவையுரிமை பற்றிய தீர்மானம் ஒன்றிற்கு அறிவிக்கைக் கொடுத்திருக்கிருர்கள்.

'While presenting the Supplementary Demands for 1975-76, the Chief and Finance Minitser stated as follows on 25th October 1975 :—

"Government have decided to extend all the concessions now being granted to Scheduled Castes to Harijans already converted to Christianity as well. In respect of admissions to educational institutions and reservations in public services, Harijan converts to Christianity will be treated on par with members of the Backward Classes. At present the descendants of Harijan converts to Christianity are not eligible for the concessions. Government have decided to do away with restrictions and to extend these concessions to Christianity so as to be on par with the members of the Backward Classes."

This idea was followed by some Members who spoke on 29th October 1975.

It is contrary to truth as evident from G.O. Ms. No. 9, Social Welfare, dated 3rd January 1974 and some earlier G.Os. as well. The speech is calculated to mislead the House. Hence it amounts to breach of privilege of the House."

என்கிற ஒரு அவை உரிமை மீறல் பிரச்னையைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவை உரிமையை மீறியதாகும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கிற அந்த உரிமை மீறல் பிரச்னை என்கிற வேண்டுகோளிலே ஜி.ஓ. நம்பரைக் குறித்திருக்கிறேன். அந்த ஜி.ஓ. ஏற்கனவே 1974-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ந் தேதி கொடுக்கப்பட்டுள்ள ஜி.ஓ. ஜி.ஓ. நெம்பர் எம்.எஸ். 9. இதற்கு முன்னாலேயே 1970-ம் ஆண்டு ஜி.ஓ.வையும் நாம் எடுத்துப் பார்ப்போமானால் ஏறத்தாழ இதை வைத்துத்தான் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் ஜி.ஓ.வைச் சரியாகப் படிக்காமல் கூறுகிறார்கள். அதைப் படித்து விட்டால் இந்த உரிமைப் பிரச்னையே வராது. ஜி.ஓ. நெம்பர் 9 ; அதற்கு மேலே சோஷியல் வெல்ஃபேர், டேட்டட், 16—9—1975 என்றிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தால் அந்த ஜி.ஓ. பழைய ஜி.ஓ. அல்ல, புதிய ஜி.ஓ. என்று புரியும். 16—9—1975 என்றிருக்கிறது.

திருமதி சத்தியவாணி முத்து : அந்த ஜி.ஓ.விலே கூட புதியதாகத் தரப்பட்டுள்ளதாக இல்லை. தயவுசெய்து என்னைப் பேச அனுமதித்துவிட்டு, பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறுக்கிடு செய்யலாம். நான் ஜி.ஓ. முழுவதையும் படித்து விடுகிறேன்.

16th September 1975—' The Government have been receiving representations from Christian Associations to extend all the concessions granted to Scheduled Castes (Hindus) to Scheduled Caste converts to Christianity on the ground that the Scheduled Caste converts to Christianity are suffering from all such social disabilities as Scheduled Castes, even after their conversion and that it is not the religion but the social disabilities and the educational backwardness that should be the basis for help. The Government have examined the representations and have decided to extend the concessions granted to Scheduled Castes (Hindus) to Scheduled

Caste converts to Christianity. Accordingly in supersession of the orders issued in this regard, the Government direct that all concessions granted to Scheduled Caste (Hindus) by the State Government be extended to Scheduled Caste converts to Christianity also. In respect of reservation in educational institutions and public services the orders in paragraph 2 below will be applicable.

2. The existing reservation of 18 per cent in the educational institutions and public service is only applicable to Scheduled Castes with reference to the orders of the Government of India. The Scheduled Caste converts will not therefore be eligible for this reservation. However, the State Government have decided to treat all the Scheduled Caste converts to Christianity irrespective of the generation of conversion as Backward Classes and to extend to them the reservation of 31 per cent for admission into educational institutions and reservation in public services.

3. Orders regarding sanction of expenditure will issue separately. The Director of Harijan Welfare is requested to submit necessary proposals for sanction of necessary expenditure immediately.

4. This order issues with the concurrence of the Finance Department vide its U.O. No. 116181/RII/75-1, dated 16th September 1975..............'

இது செப்டம்பர் மாதம் கொடுத்த ஜி.ஓ. இதை வைத்துத்தான் புதிய சலுகைகள் கொடுத்திருப்பதாகப் பத்திரிகையிலே முதலமைச்சரவர்கள் கொட்டை எழுத்திலே விளம்பரம் செய்திருந்தார்கள். நான் அப்பொழுது அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளேன். தாழ்த்தப்பட்ட மக்கள் கோரிக்கை என்ன என்பதற்கு இது பதில் அல்ல. இரண்டாவது, இந்த ஜி. ஓ. படி கொடுத்திருக்கிற சலுகைகள் ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிற சலுகைகள், அவை புதிய சலுகைகளே அல்ல. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் கூறியது புதிய சலுகைகள் அல்ல என்று நான் மறுப்புக் கொடுத்தேன். ஆனால், அதையே அதிகமாக வைத்து சில கிறிஸ்தவ சங்கங்கள் மாண்புமிகு முதலமைச்சருக்கு என்ன சொல்லி விழா நடத்தியிருக்கிறார்கள் ?